Judicial Form No.53
(see Rule 42)
DEPOSITION OF WITNESS
Chapter XXIII Code of Criminal Procedure
IN THE COURT OF JUDICIAL MAGISTRATE, SATHYAMANGALAM

CC.No:- 89/2021 Date:- 18.11.2025

Deposition of witness for prosecution :- PW :-1

| | | | |
|---|---|---|---|
| Name | ஸ்ரீஹரி | Age | |
| Father/Husband Name | | Taluk | |
| Village | | | |
| Solemnly affirmed in accordance with the provisions of Act 1969 | | | |

**<u>முதல் நிலை விசாரணை:-</u>**

1. நான் தற்போது கோவையில் வசித்து Accountant ஆக வேலை செய்து வருகிறேன். கடந்த 18.10.2020-ம் தேதியன்று நான் சத்தியமங்கலம் கடை வீதியிலுள்ள மார்க்கெட்டிற்கு சுமார் காலை 11.00 மணியளவில் நடந்து சென்றேன். அப்போது என்மீது ஒரு பைக் வந்து மோதிவிட்டது. நான் விழுந்துவிட்டேன். நான் மயக்கமாகிவிட்டேன்.

2. அதன் பின்னர் என்னை அருகிலிருந்த ஒரு நபர் ஆம்புலன்ஸில் சத்தியமங்கலம் அரசு மருத்துவமனைக்கு அழைத்துச் சென்றார். மருத்துவமனையில் எனக்கு சிகிச்சை செய்து நினைவு வந்தது. பின்னர் மேல் சிகிச்சைக்காக விஸ்வநாதன் மருத்துவமனை, சத்தியமங்கலத்திற்கு சென்றேன்.

3. 3 நாட்கள் கழித்து எனக்கு உடல்நிலை சீரானது. 24.10.2020-ம் தேதியன்று என்னுடைய கழுத்தை நான் பார்க்கும்போது என்னுடைய 3 பவுன் செயின் திருடுபோனது தெரியவந்தது. நான் காவல் நிலையத்தில் மேற்படி செயின் திருடுபோனது சம்மந்தமாக புகார் அளித்தேன். என்னிடம் காட்டப்படும் புகார் மனுதான் நான் காவல் நிலையத்தில் அளித்த புகார் மனு ஆகும். அது **அ.சா.ஆ.1 ஆக குறியீடு செய்யப்படுகிறது.**

4. விபத்து நடந்த இடத்தில் விசாரித்தபோது என்மீது மோதிய வண்டியின் எண் எனக்குத் தெரியவந்தது. தற்சமயம் அந்த எண் எனக்கு நினைவில் இல்லை. மேற்படி வண்டி எண்ணை வைத்து மேற்படி இருசக்கர வாகனத்தை என்மீது மோதியவர் பெயர் ரங்கநாதன் என்பது தெரியவந்தது. மேலும் என்மீது மோதிய இடத்தில் அருகிலிருந்தவர்களை விசாரித்தபோது என்னை ஆம்புலன்ஸில் ஏற்றிச் சென்றவர் பெயர் வெற்றிகொண்டான் என்பது தெரியவந்தது. அவர்தான் என்னுடைய செயினைத் திருடியிருப்பார் என்று கருதி நான் காவல் நிலையத்தில் புகார் அளித்தேன்.

5. 24.10.2020–ம் தேதியன்று மாலை காவல் துறையினர் என்னிடம் செயின் கிடைத்துவிட்டதாக கூறினார்கள். காவல் நிலையத்தில் வைத்து மேற்படி செயின் என்னுடையதுதானா என்று கேட்டார்கள். நானும், அடையாளம் காண்பித்தேன். மேற்படி நகையை நான் நீதிமன்றத்தின் மூலம் பெற்றுக்கொண்டேன். எதிரியைப் பார்த்தால் அடையாளம் தெரியும். போலீசார் என்னை விசாரித்தார்கள்.

<u>குறுக்கு விசாரணை:–</u>

1. நான் புகார் மனுவைக் காவல் நிலையத்தில் வைத்துதான் எழுதினேன். புகார் மனுவை நான்தான் எழுதினேன். புகார் மனுவை காவல் நிலையத்தில் யாரிடம் கொடுத்தேன் என்றால் எனக்கு நினைவில் இல்லை. சம்பவம் நடந்து 3 நாள் கழித்து புகார் கொடுத்துள்ளேன் என்றால் சரிதான்.

2. மோதிய நபர் மீது நான் விபத்து வழக்கு ஏதேனும் கொடுத்துள்ளேனா என்றால் இல்லை. மோதிய வாகனம் எந்த திசையிலிருந்து எந்த திசை நோக்கி வந்தது என்றால் கிழக்கிலிருந்து வந்ததுபோல்தான் எனக்கு நினைவில் இல்லை. மோதிய வாகனத்தின் பெயர் மற்றும் எண் எனக்குத் தெரியாது என்றால் எனக்கு நினைவில் இல்லை.

3. சம்பவம் நடக்கும்போது அருகில் எத்தனை பேர் இருந்தார்கள் என்று எனக்கு நினைவில் இல்லை. வண்டியை ஓட்டி வந்தவர் மற்றும் ஆம்புலன்ஸில் அழைத்துச் சென்றவர் பெயர் ஆகியவை அருகிலிருந்தவர்கள் கூறிதான் எனக்குத் தெரியும். நான் 18ம் தேதி மருத்துவமனையிலிருந்தபோது என்னுடைய உறவினர்கள் 5 நபர்கள் பார்க்க வந்திருப்பார்கள்.

4. காவல் துறையினர் காண்பித்த செயின் என்னுடைய செயின் என்பதற்கு ரசீதுகள் ஏதேனும் நான் கொடுத்தேனா என்றால் இல்லை. ஆம்புலன்ஸில்

வெற்றிகொண்டான் என்பவர் வந்த விபரம் எனக்கு நேரடியாகத் தெரியாது. என்னை ஒரு நபர் ஆம்புலன்ஸில் தூக்கி ஏற்றியிருக்க முடியாது என்றும் 4 நபர்கள் ஏற்றியிருப்பார்கள் என்றால் இருக்கலாம்.

5. செயினை எடுத்துச் சென்ற விபரம் எனக்கு நேரடியாகத் தெரியாது என்றால் சரிதான். இவ்வழக்கு சம்பவத்திற்கும், எதிரிக்கும் எவ்விதமான சம்மந்தமும் இல்லை என்றும், சம்பவம் நடைபெறவில்லை என்றும், அவ்வாறு மோதியிருந்தால் என்மீது மோதியவர் குறித்து நான் புகார் கொடுத்திருப்பேன் என்றும், அரசு அதிகாரிகளுக்கு ஆதரவாக பொய்யாக சாட்சியமளிக்கிறேன் என்றால் சரியல்ல. 4 நாட்கள் மருத்துவமனையில் சிகிச்சை பெறும் அளவிற்கு அதுகுறித்து நான் புகார் அளிக்காததற்கு இவ்வழக்கில் நான் கூறுவதுபோல் எவ்விதமான சம்பவமும் நடக்காததால்தான் விபத்து குறித்து புகார் அளிக்கவில்லை என்றால் சரியல்ல.

6. நான் கூறுவதுபோல் மருத்துவமனையில் சிகிச்சை பெற்றிருந்தால் நான் சிகிச்சை பெற்றதற்கான ஆவணங்களை காவல்துறையினர் இவ்வழக்கில் தாக்கல் செய்திருப்பார்கள் என்றால் சரியல்ல. நான் கூறுவதுபோல் 3 நாள் கழித்து செயின் திருடியது குறித்து தெரியவந்திருக்கும்பட்சத்தில் அன்றைய தினமே புகார் அளித்திருப்பேன் என்றும், 24.10.2020–ம் தேதியன்று புகார் அளித்திருக்க மாட்டேன் என்றால் சரியல்ல.

<u>**மறுவிசாரணை –**</u> இல்லை.

சாட்சி இன்று இந்நீதிமன்றத்தில் ஆஜராகி என்முன் திறந்த நீதிமன்றத்தில் வாய்மொழியாக சாட்சியம் அளித்ததை இந்நீதிமன்றம் தட்டச்சர் மூலமாக பதிவு செய்து சாட்சி படித்துப்பார்த்து/விளக்கி கூறி சரி என ஒப்புக்கொண்டு கையெழுத்து செய்தார்.

நீதித்துறை நடுவர்,
சத்தியமங்கலம்.